பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
30 07 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள் –

1. மேட்டூர் அணை நிரம்பியதை அடுத்து, இன்று மாலை முதல் காவிரி டெல்டா பாசனத்திற்கு 46 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
2. கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 93-ஆக அதிகரித்துள்ளது. மாநிலத்திற்குத் தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. விளைப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையின் பயன்கள் விவசாயிகளுக்கு முழுமையாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் அனைத்து மருத்துவமனைகளிலும் மாரடைப்பு மற்றும் விஷக்கடிக்கான மருந்துகள் போதிய அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடும் பிரிவில் இந்தியாவுக்கு இன்று மேலும் ஒரு வெண்கலப்பதக்கம் கிடைத்துள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது.

இதையடுத்து டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று மாலை 46 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

படிப்படியாக இது அதிகரிக்கப்பட்டு 81 ஆயிரம் கன அடிக்கும் கூடுதலாக தண்ணீர் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக அணைகளிலிருந்து கூடுதலாக உபரி நீர் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே தஞ்சை மாவட்டம் கல்லணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக நாளை காலை தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதனால் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, காரைக்கால் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள் பாசன வசதிபெறும்.

இந்நிலையில் மேட்டூர் அணையின் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் மூலம் இன்று மாலை பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

137 நாட்களுக்கு திறந்துவிடப்படும் இந்த நீரினால் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் பெய்த அதி கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 93-ஆக அதிகரித்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மற்றும் மாநில மீட்புக் குழுவினர் இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனை, பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.
கேரள அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக பிரதமர் அப்போது உறுதியளித்தார்.
இதனிடையே நிலச்சரிவினால் உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பை அடுத்து இரண்டு நாள் துக்கம் அனுசரிக்கப்படுவதாக கேரள அரசு அறிவித்துள்ளது.

அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன. தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே திருவனந்தபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன், கேரளாவில் இதுவரை இல்லாத அளவுக்கு பேரழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

வயநாடு பகுதியில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்க இரண்டு விமானங்கள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று கூறினார்.,

30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளிலிருந்து ஐயாயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென திருவனந்தபுரம் மற்றும் கோழிக்கோட்டில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாகவும் திரு பினராயி விஜயன் கூறினார்.

**[]<<<>>>[]**

வயநாட்டில் நிலச்சரிவினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

தமிழக அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

கேரள அரசுக்கு துணையாக பணியாற்றிட மூத்த ஐ ஏ எஸ் அதிகாரிகள் திரு சமீரன், திரு ஜானி டாம் வர்க்கீஸ் ஆகியோர் தலைமையில் உடனடியாக மீட்புக்குழுவை அனுப்பி வைப்பதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து ஐந்து கோடி ரூபாயை கேரள அரசுக்கு வழங்க தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

விளைப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையின் பயன்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்து மூலமாக அவர் அளித்த பதிலில், குறைந்தபட்ச ஆதரவு விலையை விவசாயிகளுக்கு முறைப்படி அளிப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

வேளாண் உற்பத்தி செலவு மற்றும் விலை நிர்ணயம் செய்வதற்கான ஆணையத்துக்கு அதிக அளவில் தன்னாட்சி அதிகாரம் வழங்குவது குறித்தும் இந்த குழு பரிந்துரைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துள்ள திரு சிவராஜ் சிங் சௌஹான் இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் உழவர்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகக் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் ரயில்வேத் துறைக்கு நடப்பு ஆண்டில் ஆறாயிரத்து 362 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில் ஆயிரத்து 302 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய ரயில்பாதைகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், 687 ரயில் மேம்பாலங்கள் மற்றும் அடிமட்டப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இரண்டாயிரத்து 152 கிலோமீட்டர் தொலைவுக்கு தமிழகத்தில் ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளர்.

தமிழகத்திற்கு ஆறு வந்தேபாரத் ரயில்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள திரு எல் முருகன், அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் 77 ரயில் நிலையங்கள் புதிய பரிமாணம் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மாரடைப்பு மற்றும் பாம்பு கடி, நாய் கடிக்கான மருந்துகள் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் கண்ணிசேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்து பேசிய அவர், இதய மாரடைப்பு அறிகுறிகளுக்கு 14 வகையான மாத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சுப்ரமணியன் ) ---40 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்திலிருந்து சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த 589 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்கத் தொகையினை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்திலிருந்து பங்கு பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதிக அளவில் சாதனை படைத்து பதக்கங்களை பெற்று வருவதாகவும் கூறினார்.

வரும் நாட்களிலும் விளையாட்டு வீரர்களுக்கும், விளையாட்டுத் துறைக்கும் அரசு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் நீலகிரி மற்றும் கோவையின் ஒரு சில பகுதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டத்தில் ஏரி குளங்களில் களிமண் மற்றும் வண்டல் மண் எடுக்க விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டத்தில் உள்ள ராமநதி அதன் முழு கொள்ளவை எட்டியதால் அணைக்கு வரும் 100 கன அடி தண்ணீரும் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலில் ஆடிப்பூர திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு இரண்டாவது பதக்கம் கிடைத்துள்ளது.

துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீட்டர் கலப்புக் குழு பிரிவில் மனுபாக்கர் - **Sarabjot Singh** இணை வெண்கலம் வென்றது.

பதக்கம் வென்றுள்ள இந்திய குழுவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு ஜெய்சங்கர், திரு எல் முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பதக்கப்பட்டியலில் இதுவரை ஜப்பான் ஆறு தங்கம் உட்பட 12 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்துள்ளது.

ஐந்து தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் பிரான்ஸ் இரண்டாவது இடத்தையும், சீனா ஐந்து தங்கம் உட்பட 12 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் 27-வது இடத்தில் உள்ளது.

***End of News***